**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**Crl.M.P. No. 4650/2022 P.W. 1 u/s. 223 of BNSS**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : திரு. அசிலர் | **Calling** | : | |
| **Father's Name** | : த/பெ. முத்து | **Age** | : | |
| **Village** | : | | | |
| **Taluk** | : | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.08.2025.**

**புகார்தாரர் தரப்பு வாக்குமூலம்**

1. நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 11.05.2017 ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் நானும், எனது அம்மாவும், எனது மனைவியும் எனது வீட்டில் பேசிக்கொண்டிருக்கும் போது எனது வீட்டிற்குள் கையில் ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த **எனது சகோதரன் சுவாமிதாஸ், அவருடைய மனைவி லைலா, மகன்கள் ரெதீஸ், பிரதீஸ், அபினேஷ்** ஆகியோர்கள் எங்கள் கண்களில் மிளகாய் பொடியை அள்ளி வீசி சரமாரியாக தாக்கினார்கள்.

2. எனது அம்மாவை பிரதீஸ், அபினேஷ்சை தவிர்த்து மற்றவர்கள் கெட்டவார்த்தைகளால் பேசியதுடன், கையில் வைத்திருந்த கம்பு மற்றும் வெட்டருவாளை வைத்து செத்து தொலைந்து போ தேவடியாமவளே என்று என் அம்மாவின் வலது இடுப்பு, கால் மற்றும் நெஞ்சு பகுதி ஆகிய இடங்களில் மாறி மாறி தாக்கினார்கள்.

3. பிரதீஸ் மற்றும் அபினேஷ் கையில் இருந்த மிளகாய் பொடியை என் கண்களில் வீசி கையில் இருந்த கம்பு மற்றும் வெட்டருவாளோடு எனது வலது கை, இடது கை மற்றும் தலைப்பகுதியில் மாறி மாறி தாக்கினார்கள். நாங்கள் உயிருக்கு பயந்து சத்தம் போட்டோம். உடனே , எனது மனைவி சகாய ஆனிபாலா மற்றும் எனது அண்ணன் நாகேந்திரன் மற்றும் பலர் ஓடி வர மேற்சொன்ன எதிரிகள் 1 மணி நேரத்தில் காலி செய்துவிட்டு ஓடிவிடுங்கள்

இல்லையென்றால் என்னை கொலை செய்துவிடுதாக கம்பை காட்டி கொலை மிரட்டல்விடுவித்தார்கள்.

4. மேற்படி செயலால் எங்களுக்கு அவமானமும் உயிர்பயமும் ஏற்பட்டது. உடனே எனது அண்ணன் நாகேந்திரன், எனது மனைவி ஆகியோர்கள் எங்களை ஆட்டோவில் ஏற்றி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். இந்த சம்பவத்தினை சுபாஷ், குமார், லிங்கராஜன் மற்றும் பலர் பார்த்தார்கள். 11.05.2017 அன்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நானும் எனது அம்மாவும் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிட்சை எடுத்துக்கொண்டோம். என் அம்மாவிற்கு அறுவை சிகிட்சை செய்யப்பட்டது.

5. நாங்கள் சிகிட்சையிலிருக்கும் போது சிறப்பு உதவி ஆய்வாளர் பிரசாத் குமார் என்பவரிடம் நான் புகார் மனுக்கொடுத்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 11.05.2017 அன்று நான் புகார் மனுவிற்கு 5 நாட்கள் கழித்து CSR No. கொடுத்தார்கள், நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் என் அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக சிகிட்சை பலன் அளிக்காமல் பல்வேறு முறையான சிகிட்சைகள் மேற்கொண்டும் அவர் 24.09.2017 அன்று இறந்துவிட்டார்.

6. மேற்படி சம்பவத்திற்கு நான் மனுக்கொடுத்தும் இரணியல் காவல்நிலையத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பின்னர் 12.10.2017 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்பட்டு அதனை M.F செய்துவிட்டார்கள். பின்னர் நான் இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மேல்விசாரணைக்காக உத்தரவு பெற்றும் அதிலும் மேற்படி காவல்நிலையத்தார் உண்மைக்கு மாறான அறிக்கை தாக்கல் செய்துவிட்டார்கள்.

7. பின்னர் நான் இது சம்மந்தமாக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து முறையான உத்தரவு பெற்றும் அதையும் மதிக்காமல்

அதிலும் உண்மைக்கு மாறான அறிக்கையை தாக்கல் செய்துவிட்டார்கள். எனவே, எனக்கும் எனது தாயாருக்கும் ஏற்பட்ட பாதிப்பிற்கு நியாயம் கிடைக்க வேண்டி தனிநபர் முறையீடாக தாக்கல் செய்துள்ளேன். எனவே, நீதிமன்றம் எனது வழக்கினை கோப்பிற்கு எடுத்து எதிரிகளுக்கு தக்க தண்டனை கிடைக்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**Crl.M.P. No. 4650/2022 P.W. 2 u/s. 223 of BNSS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சகாய அனிபாலா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. அசிலர் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.08.2025.**

**புகார்தாரர் தரப்பு வாக்குமூலம்**

1. நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். முதல் சாட்சி என்னுடைய கணவர் ஆவார். 11.05.2017 ம் தேதி காலை என் கணவரின் சகோதரர் சுவாமி தாஸ்ம் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளும் எங்கள் வீட்டிற்கு வந்து என் மாமியார் மற்றும் என் கணவர் மீது மிளகாய் பொடியை தூவி கொடுரமான ஆயுதங்களால் தாக்கி எங்களை 1 மணி நேரத்தில் வீட்டை காலிச் செய்யவேண்டுமென்று சொல்லி கொலை மிரட்டல் விடுவித்தார்கள். என் மாமியாரை அடித்து இடுப்பெலும்பை உடைத்துவிட்டார்கள். சிகிட்சைக்காக எனது கணவர் மற்றும் மாமியாரை எனது கணவரின் சகோதரன் நாகேந்திரன் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக கொண்டு சேர்த்தார்.

2. என் மாமியாருக்கு மேற்படி சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு பல்வேறு இடங்களில் முறையான சிகிட்சை செய்தும் பலன் அளிக்காமல் அவர் 24.09.2017

அன்று இறந்துவிட்டார்கள். எங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு நியாயம் வழங்க வேண்டுமென்று நீதிமன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்
இரணியல்.